**27.08.2024 அ.வ.எண்.76/2008 பி.வா.சா.1, ஆனந்தன் த/பெ. செல்வராஜ்**

**குறுக்கு விசாரணை**

2,3 பிரதிவாதிகள் 1-ம் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என கேட்டால் எனக்கு தெரியாது. பின்னிட்டு 1-ம் பிரதிவாதி வாதிக்கு வழக்கு சொத்திற்கு ஒரு கிரய உடன்படிக்கை எழுதிக்கொடுத்தார் என்றால் அதுவும் எனக்கு தெரியாது. ஒரு செண்ட் ரூ.250/- என முடிவு செய்து மொத்த தொகையையும் வாதி 1-ம் பிரதிவாதியிடம் செலுத்தினார் என்றால் அதுவும் எனக்கு தெரியாது. 1-ம் பிரதிவாதி கிரயம ் எழுதிக்கொடுக்காததால் வாதி அறிவிப்பு அனுப்பினார் என்றும் அதற்கு 1-ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு கொடுத்தார் என்றும் சொன்னால் அதுவும் எனக்கு தெரியாது. பதில் அறிவிப்பில் 1-ம் பிரதிவாதி சொத்தை 6-ம் பிரதிவாதி மைதிலிக்கு விற்றுவிட்டதாக சொல்லியுள்ளார் என்றால் அது விவரம் எனக்கு தெரியாது. நான் இரண்டு கிரயப்பத்திரங்கள் மூலம் கிரயம் வாங்கினேன். ஒரு வார இடைவெளியில் வாங்கினேன். தேதி 26.02.2007 மற்றும் 02.03.2007 என்றால் இருக்கலாம். 2-ம் பிரதிவாதி ராமகிருஷ்ண அய்யரிடம் வாங்கினேன். வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்பது சரிதான். அந்த அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் அந்த விவரம் என் வழக்கறிஞருக்குதான் தெரியும். 2, 3 பிரதிவாதிகள் 1-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணத்தை இரத்து செய்தது சட்டப்படி தவறு என்றால் அது சரியல்ல. 2,3 பிரதிவாதிகள் எனக்கு கொடுத்த கிரயம் செல்லாது என்றும் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் அது சரியல்ல. எனது கிரயத்தின் அடிப்படையில் செய்யப்பட்ட பட்டா மாற்றமும் செல்லாது என்பது சரியல்ல. அ.வ.எண்.103/2007 என்ற வழக்கை 1-ம் பிரதிவாதி எனக்கு எதிராக தாக்கல் செய்தார் என்பது சரிதான். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது சரியல்ல. 2,3 பிரதிவாதிகளை ஏமாற்றி கையெழுத்து வாங்கியவர் என நான் குறிப்பிடும் நபர் யார் என கேட்டால் அதுபற்றி என் வழக்கறிஞரிடம்தான் கேட்கவேண்டும். 1-ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுக்காமல் அதிகார ஆவணம் இரத்து செய்யப்பட்டது என்றும் அதனால் அது செல்லாது என்றும் எனது தூண்டுதலால்தான் பொது அதிகார ஆவணம் இரத்து செய்யப்பட்டது என்றும் சொன்னால் அது சரியல்ல. நான் கிரயம் வாங்கியபோது ஏற்கனவே எழுதிக்கொடுத்திருந்த அதிகார ஆவணத்தை இரத்து செய்துவிட்டதாக என்னிடம் சொன்னார்கள் அந்த இரத்து ஆவணத்தை பார்த்துள்ளேன். என்ன காரணத்திற்காக இரத்து ஆவணம் எழுதப்பட்டதாக குறிப்பிடப்பட்டது என கேட்டால் அது விவரம் ஞாபகமில்லை. வாதி முழு கிரயத்தொகையையும் செலுத்திவிட்டு சும்மா இருக்கவில்லை என்றும் அறிவிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுத்து கொண்டுதான் இருந்தார் என்றும் சொன்னால் அது சரியல்ல.